விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 269 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 28 வியாழக்கிழமை (14.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=


இலட்சக்கணக்கான பத்தர்கள் திரண்ட நல்லைக்கந்தனின் இரதோற்சவம்

## 15 பவுண் நகை நல்லூரில் களவு

### 6 தொலைபேசிகளும் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேர்த் திருவிழா வான நேற்று சுமார் 15 பவுண் நகைகள் களவு போயுள்ள தாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்த் திருவிழாவில் இலட்சக்கணக்கான அடியவர்கள் அலையென திரண்டிருந்தனர்.

இதனை சாதகமாக பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

8 பேரின் சுமார் 15 பவுண் நகை களவு போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 6 பேரின் 11

திருநெல்வேலியில்

## 12 வயது சிறுமி சடலமாக மீட்பு

### கொலைக் குற்றச்சாட்டில் அம்மம்மா கைது

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பகுதியில் உள்ள விடுதியிலிருந்து 12 வயது சிறுமி சடலமாக மீட்கப்பட்ட சம்பவத் 11

## ரயில் இயந்திர சாரதிகளின்

### பணிப் புறக்கணிப்பு கைவிடப்பட்டது

(கொழும்பு)

சாத்தியமான கலந்துரையாடல்களை அடுத்து தொடருந்து இயந்திர சாரதிகள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு நேற்று 11

# பாரத பிரதமர் மோடியை ஒன்றாகச் சந்திப்போம்

### தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாட பாரதப் பிரதமர் மோடியை ஒன்றாகச் சந்திப்போம் வாருங்கள் என தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

*(11ஆம் பக்கம் பார்க்க)*

## நல்லூர்த் திருவிழாவில் பொலிஸார் அசமந்தம்

### பொதுமக்கள் குற்றச்சாட்டு

(நல்லூர்)

நல்லூர்த் திருவிழாவின் போது கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார்தமது பணியை செம்மையாகச் செய்யவில்லை எனவும் அவர்கள் வேண்டா வெறுப்புடன் நடந்து கொண்டதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டி 04

வவுனியா பல்கலைக்கழக

## மாணவர் வரவேற்பு பதாகையில் தமிழ் மொழி புறக்கணிப்பு



(வவுனியா)

வவுனியா பல்கலைக்கழகத்தின் மாணவர் வரவேற்பு பதாகையில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது. 11

மனிதப் புதைகுழி

## புலிகளின் சயனைட் குப்பி 2 இலக்கத்தகடுகள் மீட்பு



(முல்லைத்தீவு)

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் ஏழாவது நாள் அகழ்வுகள் நேற்று இடம்பெற்ற 11

ஐ.நாவில்

## ஜனாதிபதி ரணில் விசேட உரை

(ஜெனிவா)

ஐ.நா பொதுச் சபையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையாற்றவுள்ளார். 11

## எரிபொருள் விலை நாள்தோறும் திருத்தம்

### அடுத்த ஆண்டு முதல் நடைமுறை

(கொழும்பு)

எரிபொருள் விலை ஒவ்வொரு நாளும் திருத்தப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இந்த நடைமுறை அடுத்த வருடம் முதல் அமுலாகும் என்றும் அவர் கூறினார்.

எரிபொருள் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத்திவச அழைப்பும்

## அமரர் சிறீதரராஜா லங்காதேவி

(தாதிய உத்தியோகத்தர்
பிரதேச வைத்தியசாலை, கரவெட்டி)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29.07.1956 | 27.08.2022 |





உன் பெருமையை ஒரு வரியில்
வரைய முடியுமோ!
என் கவியில் உன்னை வடிக்க
வார்த்தைகள் இல்லை என்னிடம்
புன்னகை பூ ஒன்று பூத்து உதிர்ந்தது.
சில்லறை சிதறும்
சிரிப்பழகி சிலையாய் தூங்கினாள்
என் நினைவில் வந்து வந்து
போகுதம்மா உன்முகம்!
இமைகளில் சிறைபிடிக்க
இயலவில்லை - சிதறி
விழுகின்றது என் கண்ணீர்

வளர்பிறையாய் நாங்கள் வளர
தேய்பிறையாய் நீ தேய்ந்தாய்
ஆம், தொடக்கம் முதல் முடிவு வரை
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள்
விண்நோக்கி சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
வாழ்க்கை காலம் வரை இருப்பீர்கள்
கற்றுத் தந்தவள் நீ!
பற்று வைத்தவளும் நீ!
இனிய தருணங்களை எமதாக்கியவளும் நீ!
இன்றுவிடா இனிய வாழ்வை எமக்களித்து
அதில் நீ அற்றுப் போனதேனம்மா!
உதித்த நாளில் உதிர்ந்த எம் உயிர்
உள்ளவரை உன் ஆத்மா எம்மோடு கதை பேசும்
உயிர் தந்த உறவே!

அவர்களின் 1ம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை (திவசம்) இன்று **14.09.2023 வியாழக்கிழமை** மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.
அந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

தேவமாதா கோவில் வீதி,
பருத்தித்துறை.

நீங்காப் பிரிவுத் துயருடன்...
குடும்பத்தினர்

(C-7248)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலையென திரண்ட மக்கள் வெள்ளத்தில் நல்லூர்க் கந்தன் தேரேறி வரும் காட்சி







நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார்.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர். அதேவேளை அடியவர்கள் அங்க பிரதட்சணம் செய்தும் காவடிகள் எடுத்தும் கற்பூரச் சட்டிகள் ஏந்தியும் தமது நேர்த்திக்கடனில் ஈடுபட்டனர்.

(படங்கள்- சிவசாந்தன்)

## தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

### பொன்னாவெளி மக்கள் தெரிவிப்பு

(மன்னார்)

தமக்குரிய தீர்வு கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என்று பொன்னாவெளி கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பொன்னாவெளி கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட மக்களின் விவசாய நிலங்களை ஆக்கிரமித்து அமைக்கப்படவுள்ள சீமெந்துத் தொழிற்சாலைக்கு எதிராக 41 ஆவது நாளாக அப்பகுதி மக்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில், ஏற்கனவே தனியார் நிறுவனங்களால் இப்பகுதியில் அமைக்கப்பட்ட 40 இற்கு மேற்பட்ட கிணறுகளினாலும் குடிநீர் செயற்றிட்டத்தாலும் மக்கள் குடிநீர் இன்றி அவதிப்படுவதாகவும் தற்போது சீமெந்து தொழிற்சாலைக்காக இப்பகுதியில் சுண்ணக்கல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனால் நன்னீர் உவர்நீராக மாறி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். எனினும் தமக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (நி-4-285)

## க.பொ.த பரீட்சைத் தரங்களை மாற்றியமைக்கத் திட்டம்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகள் நடத்தப்படும் தரங்களில் மாற்றம் செய்ய அரசாங்கம் தயாராகி வருகிறது.

இதற்கிணங்க, சாதாரண தரப் பரீட்சையை தரம் 10 இலும் உயர்தரப் பரீட்சையை தரம் 12 இலும் நடத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார். (நி-4)

## எலுமிச்சைப்பழத்தின் விலை சடுதியாக அதிகரிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் எலுமிச்சைப்பழத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

இதற்கமைய, தற்போது ஒரு கிலோ கிராம் எலுமிச்சைப்பழம் 700 ரூபாய் தொடக்கம் 1600 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக தற்போது சந்தையில் எலுமிச்சைப்பழத்திற்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும்,எலுமிச்சை விலை உயர்வினால் சந்தைகளில் எலுமிச்சை விற்பனையை தவிர்த்து வருவதாகவும் வியாபாரிகள் கூறுகின்றனர். (நி)

## இம்முறை தாதியர் பயிற்சிக்கு 3500 மாணவர்கள் இணைப்பு

### சுகாதார அமைச்சு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான தாதியர் பயிற்சிக்கு 3.500 மாணவர்களை ஏற்றுக் கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயிரியல் மற்றும் இயற்பியல் பிரிவுகளில் சித்தி பெற்ற மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் நாளை முதல் செப்டெம்பர் 18 ஆம் திகதி வரை இணையவழி மூலம் பெறப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பான தகவல்களை நாளை வெளியிடப்படவுள்ள அரச வர்த்தமானி மற்றும் சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.health.gov.lk இருந்து பெற்றுக் கொள்ள முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## தொடர் வீழ்ச்சியை சந்திக்கும் ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 328.53 ரூபாவாகவும் கொள்வனவு விலை 316.77 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 243.60 ரூபாவாகவும் கொள்வனவு விலை 232.07 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 354.87 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 338.96 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அதேசமயம், ஸ்டெர்லிங் பவுண்டின் விற்பனை பெறுமதி 411.53 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 394.46 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டோ விபத்து; மூவர் படுகாயம்

(கொழும்பு)

நோர்வூட் சென். ஜோன் டிலரி பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

பொகவந்தலாவ மோரா பகுதியில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியொன்று, வீதியை விட்டு விலகி, சுமார் 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில், முச்சக்கர வண்டியில் பயணித்த ஒன்றரை வயதுடைய குழந்தை உள்ளிட்ட மூவர் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா கிளாங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


# முதலாமாண்டு நினைவு தினம்

தோற்றம் 12 . 09 . 1938

மறைவு 27 . 08 . 2022



அமரர் **இராஜேஸ்வரி தணிகாசலம்**

(புதுவீட்டுராசா)

ஆண்டு ஒன்று முடிந்ததுவோ உங்கள்
அன்பு முகம் நீங்கிச் சென்று
ஆனாலும் எம் மனமோ இன்னும் ஆறவில்லை
நேற்றுப் போல் இருக்குதம்மா
அழுத பொழுதுகள் காலங்கள் பல
கடந்தாலும் என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள்

ராஜஸ்தலம்,
அல்வாய்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டபிள்ளைகள்

(17072)


### பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்

## ஆராய்வதற்கு நகல் வடிவை கோரியது மனித உரிமை ஆணைக்குழு

(கொழும்பு)

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக அதன் நகல்வடிவை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதியை கேட்டுக்கொண்டுள்ளது.

சமீபத்தில் அமைச்சரவை அனுமதி வழங்கிய சட்ட மூலத்தின் நகல்வடிவையே ஆராய்வதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

2023 ம் ஆண்டு மார்ச்மாதம் 17 திகதி வர்த்தமானியில் வெளியான சட்ட மூலத்தின் திருத்தப்பட்ட பதிப்பே தற்போதைய சட்ட மூலம் என கருதுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மார்ச் மாதம் வெளியான சட்டமூலம் குறித்த தனது அவதானிப்புகளை மனித உரிமை ஆணைக்குழு வெளியிட்டிருந்தது.

தற்போதைய சட்ட மூலத்தின் நகல் கிடைத்ததும் அதனை ஆராய்ந்த பின்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கருத்துக்களை, அவதானிப்புகளை முன்வைக்கும். (ம-7)

## நல்லூர்...

யுள்ளனர்.

நேற்று முன்தினம் (12) இடம்பெற்ற சப்பறத் திருவிழாவின்போதும் நேற்று (13) இடம்பெற்ற தேர்த் திருவிழாவின் போதும் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஆலய உள் வீதி மற்றும் வெளி வீதிகளில் மக்கள் கூட்டம் அலைமோதியதுடன் நல்லூர் முருகன் ஆலயத்துக்கு வருகின்ற வீதிகளிலும் சன நெருக்கடி கடுமையாக இருந்தது.

அதேநேரம் நல்லூர் சிவன் புது வீதி, வைமன் வீதி, அம்மன் வீதியில் ஏற்பட்ட வாகன நெரிசலால் மக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

இருந்தும் வாகன நெரிசல் உள்ள வீதிகளில் பொலிஸார் எவரும் கடமையில் ஈடுபடவில்லை.

அதேநேரம் நேற்று முன்தினம் சப்பறத் திருவிழாவின்போது நல்லூர் அரசடி வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்ட வேளை, கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தங்கியிருந்த பொலிஸார் வேடிக்கை பார்த்து நின்றனர் எனவும் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நல்லூர்த் திருவிழாவையொட்டி 400 பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்கள் வேண்டா வெறுப்பாக நடந்து கொண்டதால், பக்தர்கள் மிகுந்த அசௌகரியங்களைச் சந்தித்தனர்.

இதேவேளை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரின் தன்னலமற்ற சேவையால்; சனநெருக்கடிக்குள் அகப்பட்டவர்கள் மீட்கப்பட்டதுடன் அங்கப் பிரதட்சணம் செய்பவர்களுக்கு இடையூறு ஏற்படாமலும் பார்த்துக் கொண்டனர். (ம)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2912

**பிரதீபன்**

என்வளவு தைரியம் இருந்தால் என்னை கல்யாணம் பண்ணிட்டு எதிர்வீட்டு பொண்ண லவ் பண்ணுவ?



எல்லோரும் சொன்னாங்க. கல்யாணம் பண்ணிட்டு லவ் பண்ணு வாழ்க்கை நல்லாயிருக்குமென்னு.

**கோபிகா**

பெண்ணைக் கண்டால் பேயும் இரங்குமாம்



அதுசரி அக்கா தங்கச்சிக்குள்ள ஆயிரம் இருக்கும். நமக்கெதுக்கு வம்பு

**மீனா**

இந்தியா- பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியில் மழை வந்தால் மீண்டும் அடுத்தநாள் ஆட்டம் தொடரும்




வாடா வாடா போன தடவ எஸ்கேப் ஆயிட்ட இப்ப மாட்டிக்கிட்ட.

**வீரப்பன்**

முன்னேறி முன்னேறி நினைச்ச இடத்தைப் பிடிக்க ரொம்ப கஷ்டப்பட்டுட்டேன்

வாழ்க்கையிலையா?

கல்யாணப் பந்தியில



**செல்வம்**

கஷ்டம் வரும்போது மட்டும் கடவுளே எனக்கு மட்டும் ஏன் இந்த சோதனை என்று கேக்குறீங்களே



என்னைக்காவது கடவுளே எனக்கு மட்டும் ஏன் இந்த சந்தோசம்ன்னு கேட்டிருக்கீங்களா?

**ஜீவனா**

என் பொண்டாட்டிக்கு கோவம் வந்தா அவ அம்மா வீட்டுக்கு போயிடுவா.
நீங்க என்ன பண்ணுவீங்க.
கோவம் வர்ற மாதிரி ஏதாவது பண்ணிக்கிட்டே இருப்பேன்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியட்நாமில் தீ விபத்து 50 பேர் உடல் கருகிப் பலி

(ஹனோ)

வியட்நாம் மாநில தலைநகர் ஹனோயில் உள்ள 150 பேர் தங்கியிருந்த அடுக்கு மாடி குடியிருப்பில், நேற்று முன்தினம் இரவு பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் சுமார் 50 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காயம் அடைந்த பலர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பலர் கவலைக்கிடமாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5)

## லிபியாவில் 'டேனியல்' புயலால் 5,200 பேர் பலி, 10,000 பேர் மாயம்

(திரிபோலி)

லிபியாவில் தாக்கிய 'டேனியல்' புயலால் 5,200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் 10,000 இற்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளதாக கிழக்கு லிபியாவின் நிர்வாகத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் 2,000 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்.

## திருநாவுக்கரசு சித்திரவேல்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அலுவலர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை)

சாரையடி, புலோலி தென்மேற்கை பிறப்பிடமாகவும் 15 ஆம் கட்டையடி, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புத் தெய்வம் நோயுற்றிருந்த போதும், மறைந்த போதும் பல வழிகளிலும் உதவிய மற்றும் துயர் பகிர்ந்த சகல அன்புள்ளங்களிற்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகள். மேலும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 15.09.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். பின் முற்பகல் 10.00 மணியளவில் சபிண்டீகரண கிரியையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் மதிய போசனமும் இல்லத்தில் இடம்பெறும். தாங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைப்பதுடன் இவ் அழைப்பை தங்களுக்கான தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

(C-7254)

தோற்றம் : 29.11.1951 மறைவு : 16.08.2023

15 ஆம் கட்டை, உடுப்பிட்டி.

நன்றி.

076 458 9970

இங்ஙனம் குடும்பத்தினர்.


# இராசிபலன்

14.09.2023
ஆவணி 28, வியாழக்கிழமை
அமாவாசை முழுவதும்
பூரம் முழுவதும்

சுபநேரம் -7.33-9.03 மணிவரை
இராகுகாலம்-1.33-3.03 மணிவரை
அமாவாசை விரதம், வல்லிபுர ஆழ்வார் கொடி

சந்திராஷ்டமம்-அவிட்டம்.

வளவன்

**மேஷம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

**ரிஷபம்** – பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** – பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கடகம்** – இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** – வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனக் குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணையாக இருப்பர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** – வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும்.

**துலாம்** – திடீர் பண வரவால் மகிழ்ச்சியடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், தொலைதூரப் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** – உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** – தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**மகரம்** – உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும் நாள், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**கும்பம்** – புதிய தொழில் வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**மீனம்** – அலுவலகப் பணிகள் துரிதமாகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

காலத்தை விட பழிவாங்கக் கூடியது வேறு ஒன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை வீதியில் சுகாதார சீர்கேடுகள்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை,கனகரட்ணம் வீதி முதலாம் ஒழுங்கை சுகாதார சீர்கேடான முறையில் காணப்படுகின்றது என அந்தக் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியானது மக்களால் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்ற வீதியாகும். வீதி ஊடாகப் பயணிக்கும் மூன்று வளைவுகளில் முட்பற்றைகள் அடர்த்தியாகப் பரந்து உயர்ந்து போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுகின்றது.

அத்துடன் வீதியின் இருமருங்கிலும் பிளாஸ்டிக், கண்ணாடி, பொலித்தீன், பம்பஸ் கழிவுகளுடன் விலங்குக் கழிவுகள் எனப் பல்வேறு கழிவுகள் கொட்டப்படுகின்றன. இதனால் வீதியூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் போது துர்நாற்றம் வீசுவதுடன் மக்களுக்கு சுற்றுச் சூழல் உள்ளிட்ட சுகாதாரப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

மேலும் அவ்வீதியில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் அவ்வீதியூடாகப் பயணிக்கும் போது திருட்டுக்கள் இடம்பெறுகின்றன என்றும் கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே குறித்த வீதியில் காணப்படும் சுகாதார சீர்கேடுகளை அப்புறப்படுத்துவதற்கும் வீதியில் குப்பை கொட்டுவதைத் தடுப்பதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-4)

# சர்வதேச விசாரணையை எதிர்கொண்டு ஜனநாயகத்தை நிரூபித்தாக வேண்டும்

## சனல் 4 காணொளி தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் ஜனநாயகம் உயிர்ப்புடன் இருக்குமாயின் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், 2009 இறுதிப் போர் ஆகிய வற்றின் உண்மைத் தன்மையை சர்வதேச விசாரணை மூலம் ஆட்சியாளர்கள் நிரூபித்தாக வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது,

சனல் 4 ஊடகம் வெளியிட்ட உயிர்த்த ஞாயிறு தொடர்பான காணொளி, கில்லிங் வீல்ட்ஸ் ஆவணப்படம் ஆகியன தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தி உண்மையை வெளிக்கொணர்ந்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

கடந்த இரண்டு வாரங்களாக பாராளுமன்றத்திலும் வெளியிலும் சனல் 4 வெளியிட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சாட்சியங்களை உள்ளடக்கிய ஆவணத் தொகுப்பொன்று பேசுபொருளாக அமைந்திருக்கின்றது. இதனை கோட்டாபய, பிள்ளையான் போன்றோர் மறுதலிக்கின்ற அதேசமயம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கர்தினால் மல்கம் ரஞ்சித், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இதற்கு ஒரு சர்வதேச விசாரணை தேவை என்னும் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இருப்பினும் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு இதனை ஒரு பொய்யான ஆவணம் என்று திட்டவட்டமாக நிராகரிக்கின்றது.

சனல் 4 வெளியிட்ட ஆவணப்படத்தை போலவே 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி யுத்தத்திலும் பல லாயிரக் கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாக நூற்றுக்கணக்கான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதுதொடர்பில் சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என ஐ.நா அறிக்கை வெளியிட்டும் அதனையும் இலங்கை அரசாங்கம் மறுத்திருந்தது. எனினும் சர்வதேச விசாரணை வேண்டும் என கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் கோரி நிற்கின்றார்கள்.

இந்த நிலையில் இது தொடர்பில் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தாமல் குற்றவாளிகளுக்கு பாதுகாப்புத் தரப்பிலிருந்து பாதுகாப்பான சூழலை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

இவ் விரு விடயங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை பலரும் கோரி நிற்கின்றனர் எனின் அது நாட்டின் நீதித்துறை, பாதுகாப்புத்துறை மீது அவர்கள் நம்பிக்கையிழந்திருக்கிறார்கள் என்பதாகும்.

எனவே கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக பாரிய பொருளாதார நெருக்கடியில் மூழ்கியிருக்கும் இலங்கை அரசாங்கம், வெளிநாட்டு மூலதனங்களைக் கவர வேண்டுமாக இருந்தால் இந்த இரண்டு விடயங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை எதிர்கொண்டு உண்மைத் தன்மையை வெளிக்கொண்டு வந்து இலங்கையில் ஜனநாயகம் உயிர்ப்புடன் இருக்கிறது என்பதை ஆட்சியாளர்கள் நிரூபித்தாக வேண்டும் என அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று கொடியேற்றம்

(கரணவாய்)

துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 8.45 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் உற்சவம் இடம் பெறும்.

இதில் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெண்ணைத் திருவிழா, 23 ஆம் திகதி சனிக்கிழமை துகில் திருவிழா, 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாம்புத் திருவிழா, 25ஆம் திகதி திங்கட்கிழமை கம்சன் போர்த் திருவிழா , 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழா, 27 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழா, 28 ஆம் திகதி வியாழக் கிழமை தேர்த்திருவிழா, 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமுத்திரத் திருவிழா 30 ஆம் திகதி சனிக்கிழமை கேணித் தீர்த்தம் இடம் பெற்று அன்று மாலை கொடியிறக்கமும் இடம் பெறும். (நி-4-60)

# கண் பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குரிய பொம்மை வெளி கிளினிக் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.அதேபோன்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவமுகாம் அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப்படும்.கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்திய சாலைகளில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும் சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (நி-4)

# சண்டிஹோமப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு களபாவோடை நாகபூசணி அம்பாள் தேவஸ்தானத்தின் சண்டிஹோமப் பெருவிழா இன்று காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 11 மணிவரை நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 10 மணிக்கு மஹா அபிஷேகம், பூசை, சுவாமி உலா வருதல், அன்னதானம் ஆகியன இடம் பெறும் என ஆலய தேவஸ்தான சபை அறிவித்துள்ளது.


**NORTH LANKA IIT CITY CAMPUS**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அங்கீகாரம்.
இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC), UNESCO, IAU மற்றும் WHED யின் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்களினால் சான்றிதழ் வழங்கப்படும்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**16.09.2023 சனிக்கிழமை**

**காலை 10.00 மணி**

- **Bachelor of Education**
  Top-Up - 1 Year
  தகைமை : Teacher's Training College / Diploma in College of Education
- **Bachelor of Education**
  3 Years
  தகைமை : A/L 3 Passes
- **Master of Education**
  1 Year
  தகைமை : Bachelor of Education / Post Graduate Diploma in Education

North Lanka IIT
Top Floor,
People's Bank Building,
Stanley Road,
Jaffna.

Telephone No :
Rector 0767504535
Registrar 0778849677

(சி-7256)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாவட்டத்தின் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 17 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு விசுவமடு புண்ணை நீராவி சிவில் திணைக்களத்தின் லெப்பினன் கோணல் சந்தன சோமபாலவின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நேற்று இடம்பெற்றது. (படம்:-தேவானந்தன்)

# முல்லையில் குடும்பஸ்தர் கொலை; இருவர் கைது, ஒருவருக்கு மறியல்

(கண்டாவளை)

முல்லைத்தீவு - சிலாவத்தையில் குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டு, உடைமைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட இருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாவத்தை பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி அதிகாலை வீடொன்றுக்குள் நுழைந்த இரண்டு கொள்ளையர்கள் வீட்டிலிருந்த மூவர் மீது தாக்குதல் நடத்தி பணம், 10 பவுண் நகைகளை கொள்ளையடித்து விட்டு தப்பிச்செல்லும் போது கொள்ளையர்களால் பொல்லால் தலையில் தாக்கப்பட்டு 63 வயதான நபர் ஒருவர் உயிரிழந்தார் .

இந்நிலையில் குறித்த கொள்ளை, கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்படடனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதிகளினை சேர்ந்த 27, 26 வயதுடையவர்கள் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் நேற்று. முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு 21 ஆம் திகதிவரை தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார். மற்றைய நபர் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4-315)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 160 | 180 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 500 | 450 |
| தக்காளி | 200 | 160 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 180 | 150 | 160 | 200 |
| கரட் | 350 | 300 | 300 | 350 |
| பூசணி | 80 | 70 | 70 | 60 |
| புடோல் | 100 | 60 | 100 | 160 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 280 | 260 | 90 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 450 | 350 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 200 |
| பயற்றங்காய் | 450 | 200 | 160 | 240 |
| லீக்ஸ் | 160 | 140 | 180 | 160 |
| பீற்றூட் | 200 | 160 | 160 | 200 |
| கறிமிளகாய் | 250 | 250 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 100 | 70 | 100 | 80 |
| போஞ்சி | 450 | 400 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 120 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 50 | 120 |
| தேசிக்காய் | 800 | 700 | 1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 280 | 400 |
| முள்ளங்கி | 100 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 80 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 80 |
| ஈரப்பலா | 80 | 70 | 50 | 120 |

## குடிநீர் தொகுதி வழங்கல்

(துருமுறம்)

கிளிநொச்சி- கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேசத்தின் பல்வேறு இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டத்தின் முதற்கட்டமாக 5 குடிநீர் தொகுதிகள் மக்கள் பாவனைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. (நி-4-316)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகம் அமைத்துள்ள தெய்வப்புலமைத் திருவள்ளுவர் அறநெறிப் பாடசாலை, கவிச்சக்கரவர்த்தி கம்பர் முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை கம்பன் கலைக்கோயில் வளாகம், ஜெயந்திநகர், கிளிநொச்சியில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண சபை முதல்வர் சீ.வி. கே.சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-4)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்- 24, மார்டின் வீதி, ஆதன இல 18/15 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சந்திரகுலசிங்கம் எதிர்மனசிங்கம் சொலமன் ஜோன் மாசில்லாவின் உரித்தாளரும் என்ற பெயரில் யாழ்.மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் ஜோசப் அந்தோனி நீக்லஸ் சவிரிமுத்துவும் மேரி யோசப்பின் சவிரிமுத்துவும் 27.08.1960 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு F.E.R வன்னித்தம்பி முகதாவில் 717 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் அவரது மகளான மார்ஜர்மரீனா அன்ரனஸ் சவிரிமுத்து சாமுவேல் பீட் ஜோசப் புவிமானசிங்கி என்பவருக்கு விற்றுள்ளார்.

குறித்த ஆதனம் வழக்கு இல ஈடு /8016 விற்பனவிற்கான கட்டளைக்கமைய சோமசுந்தரம் நாசிங்கம் 1968.11.23 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு J.பற்றிக் முகதாவில் 3050 ஆம் இலக்க உறுதி மூலம் ஜோன்பிள்ளை தைரியர் என்பவருக்கு விற்றுள்ளார். யாழ்ப்பாணம், கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த ஜோன்பிள்ளைக்கு விற்றுள்ளனர்.

குறித்த ஆதனம் கனடாவில் வசிக்கும் தைரியர் றொபின்சன், தைரியர் கரிசன் தைரியர் டெரிசன், தைரியர் ஜஸ்மின், தைரியர் சேறின், தைரியர் வீக்ரறின், மற்றும் தைரியர் லினந் ஆகியோரின் அற்றோனியத் தத்துவக்காரரான அனரனற் பேர்ளின் சாமிநாதர் 17.07.2020 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 1174 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அற்றிக் பிரசாந் சாமிநாதருக்கு வழங்கியுள்ளனர்.

பின்னர் சாமுவேல் பீட்ஜோசெப் புவிமனசிங்கி கைம்பொன் மார்ஜரி மரீனா அன்ரனற் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற வழக்கு இல காணி /596/2017 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரமும் தனது சீதனமும் என வெளிப்படுத்தி 01.03.2022 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தக்ஷாமினி முகதாவில் 490 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மரியதாஸ் அடைக்கலதாசும் பெண் கலாஞானி என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளார்.

அதன் பின்னர் சொரியலாக காணப்பட்ட நிலப்பரப்பு 3 குளி 4.76 இனை முதலாம் பகுதியாக 3/4 பங்கினை (நிலப்பரப்பு 2 குளி 8.08) நிந்தமாக மரியதாஸ் அடைக்கலதாஸ் பெண் கலாராணியும் மிகுதியினை (குளி 14.68) 2 ஆம் பகுதியாக அற்றிக்பிரசாத் சாமிநாதருக்கு 24.04.2022 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 1989 ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் வழங்கியுள்ளார்.

பின்னர் 24.04.2022 ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 1989 ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் சொரியலாக காணப்பட்ட நிலப்பரப்பு 3 குளி 4.76 இனை முதலாம் பகுதியினராக 3/4 பங்கினை நிந்தமாக (நிலப்பரப்பு 2 குளி 8.08) மரியதாஸ் அடைக்கலதாசும் பெண் கலாஞானியும் மிகுதியினை (குளி 14.68) 2 ஆம் பகுதியாக அற்றிக்பிரசாத் சாமிநாதருக்கு பிரிவிட்டுள்ளனர்.

**ஆதன அட்டவணை 01**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் மாநகரசபை யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவு சுண்டிக்குளி கோவிற்பற்று காரையூர் இறை.J/74 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள "கிழவிதரை'நிலப்பரப்பு 3 குளி 3/8. இது நிலஅளவையாளர் N.கேதீஸ்வரன் 2018.09.18 ஆம் திகதி அளந்து தயாரித்த 4068 ஆம் இலக்கப்படத்தில் துண்டுகள் 1-2 ஆக காட்டப்பட்டவாறு நிலப்பரப்பு 3 குளி 4.76, இதில் ஒரு பக்கமாக துண்டு 1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 00 குளி 14.68 இந்த நிலப்பரப்பு பூச்சியம் குளி பதின்னான்கு தசம் பூச்சியம் ஆறு எட்டுக்குரிய எல்லை.

கிழக்கு :- றோமன் கத்தோலிக்க மிசனுக்குரிய ஆதனம்.
வடக்கு :- றெஜினா சந்திரோதயம் யோகராசா மற்றும்.
மேற்கு :-மார்றிலீட் யோசப் மற்றும் விக்ரோறியாசைமனின் ஆதனமும், ஒழுங்கையும்.
தெற்கு :- மேற்குறித்த 4068 ஆம் இலக்கப்படத்தில் துண்டு 2 (1 ஆம் பகுதியினருக்கு பிரித்துவிடப்படும் ஆதனம்) இதடங்கலும் வீடு வடக்கெல்லையில் உள்ள கிணற்றில் அரைவாசியும் செய்பயிர் வான்பயிர் உட்பட இதற்குச் சேர்ந்தவைகளும்,

தற்போது **அற்றிக்பிரசாத் சாமிநாதர்** இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்காக, விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒருபகுதிக்கு/முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **அற்றிக்பிரசாத் சாமிநாதர்** எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-7255)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 282





‘நாங்கள் வேட்டைக்காரர்கள். மான் வேட்டையாட வந்திருக்கிறோம்’ என்று அவர்களில் ஒருவன் சொன்னான். ‘இல்லை நீங்கள் என்ன வேட்டையாட வந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்’ என்றான் இவன். அவர்கள் இன்னும் வியப்படைந்து இவனைத் தூண்டிவிட்டார்கள்.

‘வந்தியத்தேவனைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அவன் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். என்னைச் சும்மா விட்டுவிடுவீர்களா?’ என்று கேட்டான். அவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். இவன் அவர்களை அழைத்துக் கொண்டு எங்கள் வீட்டுப் பக்கம் போனான்.”

“துரோகி, சண்டாளன்.”

“அவர்கள் போன பிறகு நான் உன்னைத் தேடிக் கொண்டு வந்தேன். நீ கடலில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்தாய்.”

“என்னிடம் அங்கேயே இதையெல்லாம் ஏன் சொல்லவில்லை. இந்தத் துணிச் சுருளை எடுத்துக் கொண்டு ஏன் ஓடி வந்தாய்?”

“இல்லாவிட்டால், நீ அவ்வளவு வேகமாக ஓடி வந்திருப்பாயா? அந்த வேட்டைக் காரர்கள்ள ஒருகை பார்க்கிறேன் என்று அவர்களைத் தேடிப் போயிருந்தாலும் போயிருப்பாய். என் பேச்சையே ஒருவேளை நம்பியிருக்கமாட்டாய். இவ்வளவையும் சொல்லி உன்னை என்னுடன் வரும்படி செய்வதற்குள் அவர்கள் உன்னை ஒருவேளை பார்த்திருப்பார்கள்.”

‘ஆகா! இந்தப் பெண்ணையா நாம் பைத்தியக்காரி என்று எண்ணினோம்’ என்று வந்தியத்தேவன் நினைத்து வெட்கம் அடைந்தான்.

‘இவளிடம் பூரண நம்பிக்கை வைத்தேயாக வேண்டும். இவளுடைய உதவி இல்லாவிட்டால் நாம் கடலைக் கடந்து இலங்கை செல்ல முடியாது. இவ்வளவு தூரம் வந்ததும் வீணாகும். பழுவேட்டரையர்களிடம் திரும்ப அகப்பட்டுக் கொள்ளவும் நேரலாம்.’

“பெண்ணே! நீ எனக்கு எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறாய் என்பதைச் சொல்லி முடியாது. மிச்ச உதவியையும் நீதான் செய்ய வேண்டும்.”

“என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?” என்று கேட்டாள்.

“என் சிநேகிதனுடைய இலட்சணத்தைப் பார்த்து விட்டாய் அல்லவா? அவனை நம்பிப் பயன் இல்லையென்று தெரிந்து கொண்டாய் அல்லவா? நீதான் படகு வலித்து வந்து என்னை இலங்கையில் சேர்ப்பிக்க வேண்டும்”

பூங்குழலி மௌனமாயிருந்தாள்.

“நான் தப்புக் காரியம் எதுவும் செய்யக்கூடியவன் அல்ல என்று உனக்கு நம்பிக்கை ஏற்படுகிறதா? பெண்ணே! இலங்கைக்கு மிக முக்கியமான காரியமாக நான் உடனே போய்த் தீர வேண்டும். இந்த உதவி எனக்கு நீ அவசியம் செய்தேயாக வேண்டும்.”

“செய்தால் எனக்கு என்ன தருவாய்?” என்று பூங்குழலி கேட்டாள். அவளுடைய முகத்தில் முதன்முதலாக நாணத்தின் அறிகுறி தென்பட்டது. கன்னங்கள் குழிந்தன. அவளுடைய முகத்தின் அழகு பன்மடங்கு அதிகமாகிச் சுடர்விட்டு ஒளிர்ந்தது.

முதல் நாள் இரவு கண்ட கனவில் இதே மாதிரி அவள் கேட்டது வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது. அதே வார்த்தைகள் மறுபடியும் அவன் நாவில் வருவதற்குத் துடித்தன. பல்லினால் நாவைக் கடித்துக் கொண்டு அந்த வார்த்தை வராமல் நிறுத்தினான்.

“பெண்ணே! இந்த உதவி நீ எனக்குச் செய்தால் உயிர் உள்ள அளவும் மறக்க மாட்டேன் என்றென்றும் நன்றி செலுத்துவேன். உனக்கு நான் இதற்குப் பிரதியாகச் செய்யக் கூடியது எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நீ ஏதாவது செய்யும்படி சொன்னால் கட்டாயம் செய்வேன்.”

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நல்ல கரடியும் தந்திர நரியும்

(நேற்றைய தொடர்ச்சி)



நரியை பார்த்த கரடி சொன்னது, “நண்பா உங்கிட்ட ஒரு விஷயம் பேசணும்னு” சொல்லிச்சு. நரியோ, “சொல்லு நண்பா” என்றது சற்றுக் குழப்பத்துடன். கரடி, “காலம் மாற மாற இந்த மனிதர்களால் நம்ம காடு அழிவை நோக்கிப் போகுது. நமக்கும் சரிவர உணவு கிடைக்க மாட்டேங்குது.

அதனால் நம்மோட எண்ணங்களும் மாறி போகுது. மனிதர்கள் அழிக்கும் காட்டை நாம தான் பாதுகாக்கணும் இல்லையா. அதனால என்கிட்ட ஒரு யோசனை இருக்கு சொல்லவா? என்றது கரடி. ஆச்சரியத்துடன் “என்ன யோசனை” என்றது நரி. நமக்கு தேவையான உணவை நாமே தயாரிப்போம். அதாவது விவசாயம் செய்வோம்” என்றது கரடி. நரிக்கு மகிழ்ச்சி. உடனே “சரி நண்பா. வேலையை சீக்கரம் தொடங்கலாம்” என்றது. நரியின் உள்ளுணர்வு கரடிக்குப் அப்போது தெரியவில்லை. மறுநாள் இருவரும் ஒரு இடத்தை தேர்வு செய்தார்கள். அந்த இடத்தை சுத்தம் செய்து உழுதார்கள். விளைச்சல் செய்வதற்கு முன்னால் நரி கரடியிடம் சொன்னது. “நண்பா விவசாயம் செய்து வரும் அறுவடையில் நாம சரிபாதியாக பிரித்துக் கொள்வோம்.

அதாவது நிலத்திற்கு மேலே விளையும் அனைத்தையும் நான் எடுத்து கொள்கிறேன். கீழே விளைவதை நீ எடுத்து கொள் என்றது. எதையும் யோசிக்காமல் கரடி அதற்கு சம்மதித்தது.

நரி சோள விதையை விதைத்தது. கரடி நரியை விட அதிகமா உழைத்தது. இரவு பகலாக உழைத்தது. இரண்டும் முதல் அறுவடைக்கு காத்துக் கொண்டு இருந்தன. அறுவடையில் நிலத்திற்கு மேலே விளைந்த அனைத்து சோள முத்துக்களையும் நரி எடுத்து கொண்டது.

கரடிக்கு வெறும் வேர்கள்தான் மிஞ்சின. கடுமையாக உழைத்த கரடிக்கு ஒரு சோள முத்து கூட கிடைக்கவில்லை. நரியும் தரவில்லை. கரடி சோகமானது. நரி தந்திரமாக கரடியை ஏமாற்றியது.

நட்பினால் யோசிக்காத கரடி தன்னை நரி ஏமாற்றியதை உணர்ந்தது. இப்போது தான் மற்ற உயிரினங்களின் சொற்களை யோசித்து பார்த்தது. தன் முட்டாள்த்தனத்தை எண்ணி வருந்தியது கரடி.

கதை எப்படி இருந்துச்சு குட்டிஸ். நல்ல நண்பர்களை கூட வைத்திருக்கணும். தீயவர்களிடம் வைத்திருக்கும் நட்பு ஒருநாள் நமக்கே கவலையாக மாறும்ங்கிறது புரிஞ்சுதா.

நீங்களும் இனி தீயவர்களிடம் பழகுவதை விட்டுவிடுங்கள். கூடா நட்பு கேடாய் முடியும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.
- கோன்பு தசுன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொது வெளிகளில் தீ வைக்கும் தீயவரை தடுக்க மாட்டீரோ!

நாட்டில் – நம் மண்ணில் நடக்கின்ற அக்கிரமங்களை, அநியாயங்களை என்னென்று சொல்வது.

அவரவர் தாம் தாம் நினைத்தபடி நடந்து கொள்ள முடியும் என்ற நிலைமை வந்து விட்டது.

வீட்டுக்கழிவுகளை வீதிகளில் கொட்டுவது, வீட்டு நுழைவாயிலுக்கும் வீதிக்கும் இடையில் சிமெந்து இட்டு வீதியோரத்தை அபகரிப்பது.

வீதிகளைத் தடை செய்யும் வகையில் வாகனங்களை நிறுத்துவது, அதிலும் குறிப்பாக, ஒழுங்கைகளுக்கு முன்னால் வாகனங்களை நிறுத்துவது. அதுபற்றிக் கதைத்தால், சண்டித்தனம் செய்வது என ஏகப்பட்ட அக்கிரமங்கள் நம் மண்ணில் நடந்தாகின்றன.

கேட்பதற்கு யாருமில்லை என்ற நிலையில் இவையெல்லாம் நடந்தாகிறது.

இத்தகைய அடாவடித்தனம் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள் சொல்லொணாத் துயரத்தை அனுபவிக்கின்றனர்.

இத்தகைய நிலைமை காரணமாக, பண்பாளர்கள், நீதிக்குக் கட்டுப்பட்டவர்கள், மனச்சாட்சிப்படி நடப்பவர்கள் இனி இந்த மண்ணில் வாழ முடியாதென்ற அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

இதில் இப்போது ஊர்தோறும் நடக்கின்ற மிகப்பெரிய அநியாயம் வயல்களிலும் புற்றரைகளிலும் மரங்கள், வடலிகள், பற்றைகள் உள்ள இடங்களுக்கும் தீ வைக்கின்ற நாசகாரமாகும்.

ஆம், வயல்கள் மற்றும் புற்றரைகளுக்கு நெருப்பு வைத்துவிட, தற்போதைய வறட்சியும் கடும் காற்றும் சேர்ந்து அப்பகுதி முழுவதையும் தீக்கு இரையாக்கின்றன.

ஆம், எங்கோ ஒரு மூலையில் வைத்த நெருப்பு புற்றரைகளை எரித்து பனைகள், பற்றைகள், வடலிகள், பயன்தரும் மரங்கள், வேலிகள் எல்லை மரங்கள் என எங்கும் பரவி எல்லாவற்றையும் எரித்து நாசமாக்குகின்றன.

அதிலும் தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் போடப்பட்ட வேலிகள் முற்றாக எரிந்து நாசமாகுவதால் விவசாயிகள் என்ன செய்வது, ஏது செய்வது என்று தெரியாமல் திண்டாடுகின்றனர்.

சில இடங்களில் விசமிகள் தீயை வைத்துவிட, அதனால் இயற்கை வளம் முழுமையாக அழிந்து போகின்றது.

இதைவிட சில இடங்களில் விசமிகள் வைத்த நெருப்பு தென்னந்தோட்டங்களை எரித்து துவம்சம் செய்துள்ளது.

எனவே நினைத்தபாட்டில் தீ வைப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து தீ வைக்கின்ற தீயவர்களால் வீடுகள் பற்றி எரிந்து உயிர்கள் பலியாகின்ற நிலைமையும் ஏற்படலாம்.

எனவே இதுவிடயத்தில் அந்தந்தப் பிரதேச செயலகங்கள் கவனம் எடுக்க வேண்டும்.

அதேநேரம் குறித்த பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் நிலையங்கள் ஒலிபெருக்கி மூலம் பொதுவெளிகளில் நெருப்பு வைப்பது குற்றச் செயல் என்பதை அறிவிப்பதோடு, நெருப்பு வைத்தவர்களை இனங்கண்டு அவர்களைக் கைது செய்ய வேண்டும்.

அப்போதுதான் தீ வைக்கின்ற தீமை கட்டுப்படுத்தப்படும்.

### ரயில் நிலையங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு

# ஜனாதிபதியின் வர்த்தமானியை புறக்கணித்து ரயில் தொழிற்சங்கங்கள் போராட்டம்

(கொழும்பு)

புகையிரத சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இலங்கை ரயில் இன்ஜின் இயக்க பொறியியலாளர்கள் சங்கம் தொடர்ந்தும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் எஸ்.ஆர்.சி.எம். சேனநாயக்க தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சரோ அல்லது வேறு யாரேனும் பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை. அவ்வாறு அழைத்தால் அதனை தம்மிடம் அறியத்தருமாறு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கிறேன். வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஆட்சியாளர்களுக்கு விருப்பம் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ரயில் சேவையில் 450 ஓட்டுநர்கள் இருக்க வேண்டும். ஆனால், தற்போது 280 பேர் மட்டுமே திணைக்களத்தில் உள்ளனர்.

இதேவேளை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள 84 புகையிரத இயந்திர சாரதிகளை உடனடியாக கடமைக்கு சமூகமளிக்குமாறும் தவறினால் பதவியில் இருந்து விலகியதாக கருதப்படுமென ரயில்வே திணைக்களத்தால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

ஆட்சேர்ப்பு நடைமுறையில் திருத்தம் பதவி உயர்வு உள்ளிட்ட பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து ரயில்வே இன்ஜின் இயக்க பொறியியலாளர் சங்கம் கடந்த திங்கட்கிழமை (11) நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

வேலைநிறுத்தம் காரணமாக 128க்கும் மேற்பட்ட ரயில் பயணங்கள் ரத்து செய்யப்பட்டதால் சாரதிகள் பணியிலிருந்து விலகியதால் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

எவ்வாறாயினும், சிரமத்திற்கு உள்ளாகும் பயணிகளுக்காக நேற்றுக் காலை மற்றும் மாலை வேளைகளில் 139 திட்டமிடப்பட்ட ரயில் சேவைகளை ரயில்வே திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் புகையிரத நிலையங்களில் பாதுகாப்பு கடமைகளுக்காக இராணுவத்தினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ரயில் சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிட்ட பின் புலத்திலேயே இராணுவப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### கட்டுநாயக்க விமான நிலையத்தில்

# 19 கோடி பெறுமதியான கொக்கெய்ன் பிடிபட்டது

(கொழும்பு)

19 கோடி ரூபா பெறுமதியான 2.5 கிலோ கிராம் கொக்கெய்ன் போதைப் பொருள் சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் குழுவினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கட்டுநாயக்க விமான சரக்கு முனையத்தில் DHL வளாகத்தில் வைத்து கைப்பற்றப்பட்டது.

இந்த போதைப்பொருள் ஒரு volleyball வலையின் மேல் மற்றும் கீழ் விளிம்புகளில் கூடுதல் பிளாஸ்டிக் குழாய் செருகப்பட்டு மறைக்கபட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

பிரேசிலில் இருந்து கொழும்பு மருதானை பகுதியில் உள்ள முகவரிக்கு இந்த போதைப்பொருள் அடங்கிய ஏர் மெயில் பார்சல் அனுப்பப்பட்டுள்ளது.

பார்சலின் உரிமையாளர்கள் இருவர் கட்டுநாயக்க விமானசரக்கு முனையத்திற்கு வரவழைக்கப்பட்டு கைது செய்த சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளுக்காக இருவரையும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-7)

### பழுதடைந்த கேக் விநியோகம்

# வெதுப்பகம் ஒன்றிற்கெதிராக வவுனியாவில் முறைப்பாடு

(வவுனியா)

பழுதடைந்த கேக் விற்பனை செய்ததாக வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள வெதுப்பகம் ஒன்றிற்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பொது சுகாதார பரிசோதகர்களிடமே குறித்த முறைப்பாடு நேற்று செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள பிரபல வெதுப்பகம் ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட அடைக் கேக் ஒன்றினை கொள்வனவு செய்தவர், குறித்த கேக் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாக வவுனியா பொது பரிசோதகரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டையடுத்து சுகாதார பரிசோதகர்கள் குறித்த சம்பவம் தொடர்பில் பரிசோதனைகளையும், விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

# தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு அவர்களில் தகுதியானவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீண்டகாலமாக தொண்டர் ஆசிரியர்களாக சேவையாற்றுகின்றவர்களுக்கு, நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடாத்தப்படும் மென்பொறியியல் இளமாணி (Bachelor of Software Engineering (Hons) 2023/2024 கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தரத்தில் எந்த பிரிவிலாயினும் மூன்று பாடத்தில் சித்தியடைந்திருத்தல் போதுமானது. விண்ணப்பிக்க விரும்புவர்கள் எதிர்வரும் 22/09/2023 க்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) விண்ணப்பத்தினை பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் (021-222 3374) தொடர்புகொள்ளுமாறு மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைகுளம், மலையாபருத்திக்குளம், சமணங்குளம், சி.இ.சி கல் உடைக்கும் ஆலை, காத்தார்சின்னக்குளம் ஆலை, பிரசன்னா கல் உடைக்கும் ஆலை, மடுகந்த டெலிகொம், அளுத்வத்த, அட்டம்பகஸ்கட, போகஸ்வேவா, கருவேலப்புளியங்குளம், மாமடுவ வைத்தியசாலை, மாமடுவ கிராமம், மகாகச்சக்கொடிய, மலையாபருத்திக்குளம், மல்மடுவா (மகாகச்சக்கொடிய), மாமடுவ, நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்மடு, சலலிங்கம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

# பரிசளிப்பும் ஆண்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக் கூடலினால் நல்லூர் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணக் கல்வி வலய பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் ஆண்டு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன கலமண்டபத்தில் நடை பெறவுள்ளது.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் இணைத் தலைவர் இ. இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி த. கோபிசங்கர், சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு



31

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு அந்த நிபந்தனை ஒரு புறத்தில் நல்ல செய்தியாகவும் மறு புறத்தில் மற்றுழ் கெட்ட செய்தியாகவும் இருக்கும். அரசியல் ரீதியில் விரும்பத்தகாதவாறு நிதிக்கொள்கையை மாற்றுமாறு IMF கேட்கும் என்பது கெட்ட செய்தி. நிதிக் கொள்கையில் மாற்றம் கொண்டு வந்தேயாக வேண்டும் என்று அரசியல்வாதிகள் உணர்ந்து கொண்டால் அதனை தாங்கள் சொந்தமாக செய்கிறோம் என்று சொல்வதை விட IMF மீது குற்றம் சாட்டுவது அவர்களுக்கு மிகவும் எளிதானது.

கடன் வழங்கும் வணிகர்களின் பார்வையில் IMF ஒரு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. பண முறிச் சந்தையில் பல்லாயிரக்கணக்கான முதலீட்டாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் கணிசமான பகுதியினர் கடன்பட்ட நாட்டின் நிலையை ஆய்வு செய்து, அதற்கு கடன் மறுசீரமைப்பு அவசியமா, அல்லது அந்த கடன் மறுசீரமைப்பு அந் நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்யுமா என்பது பற்றிய பார்வையை அவர்களால் உருவாக்க முடியும் என்று நம்புவது முட்டாளத்தனம். ஆனால் வணிக கடன் வழங்குநர் ஒரு விடயத்தையிட்டு மிகவும் பயப்படுவர். உள்ளூர் அரசியல்வாதிகள் தமது அவமானகரமான வெட்கப்படக்கூடிய பொருளாதார சீர்கேட்டு வரலாற்றை ஏற்றுக் கொண்டு கடன் மறுசீரமைப்பை அறிவிக்கும் அதே வேளை தமது ஆண்டவரின் வாளைத் தாங்கி இந்த கடனளித்தவர்களுடன் சண்டையிட்டு தமது கடன்களை சரி செய்வோம் என்று அவர்கள் சொல்லக் கூடும். ஏனென்றால், கடனளிப்பவர்களிடமிருந்து எவ்வளவுக்கு கடன் நிவாரணம் கடனாளி நாட்டுக்கு கிடைக்கிறதோ, அவ்வளவுக்கு குறைவாக ஒரு அரசியல்வாதி உள்ளூரில் பொருளாதார மாற்றத்தை செயற்படுத்த வேண்டும். அவர்களுக்கு வெளிநாட்டுக் கடனளிப்பவர்கள் முக்கியமல்ல, உள்ளூரில் வாக்களிக்கும் மக்களே முக்கியம். இதுதான் வணிக கடன் வழங்குநர்களுக்கு இருக்கும் பயம்.

ஒவ்வொரு பிணை முறிக்கடன் மறுசீரமைப்புக்கும் அடிப்படையில் இருப்பது எவ்வாறு அந்த கடன் சுமை கடனாளியாலும் கடனளித்தவராலும் பகிரப்பட வேண்டும் என்ற முடிவு தான். கடன்பட்ட நாட்டின் நிதிநிலைமையை சரி செய்வற்காக அதன் குடிமக்கள் மீது எவ்வளவு அசௌகரியம் சுமத்தப்படலாம். அதேவேளை கடன் வழங்கியவர்கள் எவ்வளவு கடன் நிவாரணத்தை கடன்பட்ட நாட்டுக்கு வழங்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட வேண்டும். இந்த முடிவு கடன்பட்ட நாட்டில் எவ்வளவு பொதுத்துறை பணியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட வேண்டும், எவ்வளவு தூரம் வரிகளை உயர்த்த வேண்டும், எந்த மானியங்களை அகற்ற வேண்டும், எவ்வளவு ஓய்வூதியம் குறைக்கப்பட வேண்டும் என்பது போன்ற முடிவுகளை உள்ளடக்கும். இதுதான் அடிப்படை. நாங்கள் விரும்புகிறோமோ இல்லையோ இந்த முடிவை எடுக்கக் கூடிய அரசியல் சட்டபூர்வத் தன்மை மற்றும் அதைச் செய்வதற்கான திறமை ஆகிய இரண்டையும் கொண்டுள்ள ஒரே ஒரு நிறுவனம் மட்டுமே எங்களிடம் உள்ளது. அதுதான் சர்வதேச நாணய நிதியம் (IMF).

ஒரு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையின் போது, ஒரு மூன்றாம் தரப்பு (IMF) அது சம்பந்தமான முடிவுகளை எடுப்பது, அந்த மறுசீரமைப்பில் சேர அழைக்கப்பட்ட வணிகக் கடன் அளித்தவர்களின் பார்வையில் ஒரு சாதகமான விடயம். முடிவுகளை IMF எடுக்கும். ஆனால் அதனை வெளியில் சொல்லாது. ஆனால் நீங்கள் ஒரு நாட்டிற்கான IMF திட்டத்தைப் பார்த்தால், அந்த பட்டியலில் கடன் நிவாரணத்திற்காக ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்பட்டிருப்பதை காணலாம். அந்த தொகையே வணிக கடன் வழங்குபவர்களின் தலைவிதியை வெளிப்படையாக வரையறுக்கிறது. IMF அந்த தொகையை எப்படி பயன்படுத்துவது என்று ஒரு நாட்டிற்குச் சொல்லாது. ஆனால் இந்தத் தொகைக்கு மேல் நீங்கள் செலுத்தக்கூடாது என்று அவர்கள் சொல்வார்கள். அப்படி செலுத்தினால் அந்த திட்டம் உடைந்து போகும். அதனை மீண்டும் புதிதாக ஆரம்பிக்க வேண்டி வரும்.

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையின் மிகவும் கவர்ச்சிகரமான அம்சங்களில் ஒன்றாக நான் (லீ புக்ஹைற்) இதனை நினைக்கிறேன். இது பல ஆண்டுகளாக இந்த துறையில் பணியாற்றியதிலிருந்து நான் (லீ புக்ஹைற்) கண்டறிந்தது. வணிகக் கடன்வழங்குநர்கள் ஒரு கடனாளி நாட்டுடன் இணைந்து ஒரு கடன் மறுசீரமைப்பில் ஈடுபடும் பொழுது, அவர்கள் பெரும்பாலும் பார்க்கத் தவறுவது என்னவென்றால் அந்த நடவடிக்கையின் விளைவு பெரும்பாலும் முன்னரே தீர்மானிக்கப்பட்டு விட்டது என்பது. எந்தவொரு கடனாளி நாட்டின் நிதி அமைச்சரும் IMF கூறியுள்ளதுக்கு விட மேலாக வணிகக் கடன் வழங்குநர்களுக்கு பணம் செலுத்தும் வற்புறுத்தலுக்கு இணங்கக் கூடாது. அப்படி இணங்கும் பட்சத்தில் முழு திட்டமும் சிக்கலுக்கு உள்ளாகும். ஆனால் இறையியலைப் போலவே பிணை முறிக் கடன் மறுசீரமைப்பிலும் அங்கு இருப்பவர்களுக்கு தமது முடிவுகளை தாமே எடுப்பதற்கான சுதந்திரம் உள்ளது என்ற மாயையை அவர்கள் மத்தியில் உருவாக்குவது பல சமயங்களில் உபயோகமானது.

இங்குவரும் முதலாவது கேள்வி, யாருடைய கடன் மறுசீரமைக்கப்படும், யாருடையது மறுசீரமைக்கப்படாது? இங்கே பொதுவான விதிகள் உள்ளன. நீங்கள் ஒரு நாட்டுக்கு பிணைமுறி மூலம் கடன் வழங்குபவராக இருந்தால், எந்த மறுசீரமைப்பு விவாதத்திலும் உங்கள் முதல் நோக்கம் அதிலிருந்து வெளியேறும் வழியைப் பேசுவதே. அதாவது, விலக்கு அளிக்கப்பட்ட கடன் என்று பெயரிடப்படும் ஒரு வகைக்குள் உங்களை வைக்க கடனாளி நாட்டை வற்புறுத்துவதே உங்கள் நோக்கமாக இருக்கும். அவ்வாறான விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் கோருவதற்கான காரணம் நம்பத்தகுந்ததாக இருக்க வேண்டும்.

இந்த விலக்களிக்கப்படும் கடன் வழங்குநர் பட்டியலில் மிகவும் மேலே இருப்பவை பன்னாட்டு நிதி நிறுவனங்கள். IMF, உலக வங்கி மற்றும் பிராந்திய வங்கிகள். உதாரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆகியவை பட்டியலில் மேலே இருப்பார்கள். அதற்கு அவர்களின் சாக்கு, தாங்கள் வேறு யாரும் கடன் கொடுக்க முன்வராத போது கடன் கொடுப்பவர்கள் என்பது. இது அமெரிக்காவில் ஒரு நிறுவனம் சட்டப்படி திவாலான நிலைக்குச் செல்லும் போது நடப்பதைப் போன்றது. சட்டப்படி திவாலான நிலைக்குச் செல்லும் ஒரு நிறுவனம் புதிய கடன்களை வாங்க முடியும். ஆனால் அந்த நிறுவனம் கலைக்கப்படும் நிலை வருமானால் அந்த கலைப்பினால் வரக்கூடிய பணத்தை பெறுவதற்கு புதிய கடன் கொடுத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இந்த பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கு கீழே அடுத்து இருப்பவை பன்னாட்டு நிதி நிறுவனங்களை போன்று வர முயற்சிக்கும் நிறுவனங்கள். அவர்கள் தமக்கு அரசாங்கங்களுடன் இணைப்பு இருப்பதாக சொல்வார்கள். இந்த வகையில் கரீபியன் அபிவருத்தி வங்கி, ஐரோப்பிய முதலீட்டு வங்கி மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கி போன்றவை அடங்கும்.

இவர்களுக்குக் கீழே இருக்கும் அடுத்த குழுக்களைப் பார்ப்போமானால், அவர்கள் தமது கடனை மறுசீரமைத்தால் கடனாளி நாட்டுக்கு மோசமான விளைவுகள் ஏற்படும் என்று வாதிடுபவர்களாக இருப்பார்கள். இந்தக் குழுவுக்கு சிறந்த உதாரணமாக இருப்பவர்கள் வர்த்தக கடன் வழங்குநர்கள் மற்றும் பொருட்களின் விற்பனையாளர்கள். வர்த்தக கடன் இல்லாமல் ஒரு நாடு இருக்க முடியாது என்ற வாதத்தை முன்வைத்து அவர்கள் பொதுவாக கடன் மறுசீரமைப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். அல்லது குறைந்தபட்சம் சில சலுகைகளை பெற முடியும்.

பிணைமுறிக் கடன் மறுசீரமைப்புகளில் குறுகிய கால அரசாங்க கடன்களை விலக்குவது வழக்கமானதாகிவிட்டது. உதாரணமாக அரசாங்கத்தால் விற்கப்படும் குறுகிய கால நாணயமுறிகள். ஏனென்றால், கடன் மறுசீரமைப்பிற்குப் பின் வரும் காலத்தில் உடனடியாக ஒரு நாடு பிணைமுறி வணிக சந்தையை அணுக முடியாது. ஆனால் அந்த நாட்டுக்கு மறு கடனெடுத்தற் தேவை இருக்கும். எனவே குறுகிய கால நாணய முறிகள் போன்றவை கடன் மறுசீரமைப்பில் இருந்து விலக்கப் படுவது முற்றிலும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றாகி விட்டது.

நீங்கள் ஒரு கடன் வழங்குநராக இருந்தால் எந்த கடன் மறுசீரமைப்பு விவாதத்திலும் உங்கள் முதல் நோக்கம் அதிலிருந்து வெளியேறும் வழியைப் பார்ப்பதே என்று இதுவரை கதைத்தோம். இரண்டாவது பொது விதி என்னவென்றால், அதிலிருந்து வெளியேறும் வழியை உங்களால் அடைய முடியாவிட்டால், மற்ற கடன் வழங்குனர்கள் அனைவரையும் அதில் இணைக்க வேண்டும் என்று நீங்கள் வலியுறுத்த வேண்டும். ஏனென்றால், இது ஒரு வகையில் எவருக்குமே வெற்றி கிடைக்காத ஒரு விளையாட்டு.

எவ்வளவுக்கு எவ்வளவு கடன் அளித்தவர்கள் கடன் மறுசீரமைபைப்பில் பங்கேற்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு ஒரு தனி கடனளிப்பாளருக்கான பாதிப்பு குறைவாக இருக்கும்.

அதாவது நீங்கள் கொதிக்கும் எண்ணெய்ச் சட்டியில் இருக்கிறீர்கள் என்று உணரும் பட்சத்தில் மற்ற எல்லோரையும் அந்த எண்ணெய்ச் சட்டிக்குள் இழுத்து விடுமாறு கடனாளி நாட்டுக்கு அழுத்தம் கொடுப்பது உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டிலிருந்து புறப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 3.15 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கைக் குழுவினர் புறப்பட்டு சென்றுள்ளனர்.

78ஆவது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

குறித்த கூட்டத்தொடரில் 21ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார். (ம-7)

## மாணவர்...

வவுனியா பல்கலைக்கழகத்தில் 2021 (22) ஆம் வருடத்தில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி வவுனியா பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள பிரயோக விஞ்ஞான பீட மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கை வவுனியா பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் முதல் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த மாணவர்களை வரவேற்கும் முகமாக பல்கலைக்கழக விடுதி மற்றும் அதனுடன் இணைந்த பகுதியில் வரவேற்பு பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த பதாகையில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதுடன், ஆங்கில மொழியும் காணப்படுகின்றது. தமிழ் மொழி முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் உள்ள இரண்டாவது பல்கலைக்கழகமும், தமிழ் மக்கள் வாழும் பகுதியில் உள்ள வன்னிக்கான பல்கலைக்கழகமுமான வவுனியாப் பல்கலைக்கழகம் ஆரம்பித்து இரண்டு வருடங்கள் முடிவதற்கு முன்னரே தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு சிங்கள மயமாக்கல் இடம்பெறுவது குறித்து சமூக ஆர்வலர்கள் பலரும் சமூக வலைத்தளங்களில் விசனம் வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

## புலிகளின்...

நிலையில், மூன்று மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன், விடுதலைப் புலிகளின் சயனைட் குப்பி ஒன்றும், இரண்டு இலக்கத் தகடுகளும் தடயப் பொருட்களாக எடுக்கப்பட்டன.

இந்நிலையில் ஏழுநாட்கள் அகழ்வாய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை 9 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை குறித்த அகழ்வாய்வு பணிகளுக்கென, 5.7 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், அந்த நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தி கடந்தவாரம் அகழ்வுப்பணிகள் மேற்கொள்ள முடிந்ததுடன், இந்த வாரமும் அகழ்வுப் பணியை மேற்கொள்ளவுள்ளதாகவும், தொடர்ந்து அடுத்த வாரமும் நீதிமன்றம் உத்தரவிட்டால் அகழ்வாய்வுகளை மேற்கொள்ள நிதி போதுமானதாக உள்ளதாகவும் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி தகவல் தெரிவித்துள்ளார். (ம-7,299)

## எரிபொருள்...

விநியோகிப்பாளர்கள் சங்கம் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எரிபொருள் விநியோகிப்பவர்கள் விற்பனைக் கொடுப்பனவு, புதிய எரிபொருள் நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் மசகு எண்ணெய் விற்பனை தொடர்பாக தொடரப்பட்டுள்ள வழக்குகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக கஞ்சன விஜேசேகர மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## 15 பவுண்...

தொலைபேசிகளும் அபகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ரயில்...

மாலை கைவிடப்பட்டது.

நேற்று மாலை தொடருந்து திணைக்கள அதிகாரிகள் மற்றும் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டவர்களுக்கு மத்தியில் இடம்பெற்ற சந்திப்பின் போது சாதகமான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளது. (ம-7)

## பாரத பிரதமர்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி., ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பிரியமான சகபாடிகளே!

தமிழ்த் தேசிய அரசியல் கட்சித் தலைவர்கள் பிரதமர் மோடியைச் சந்திக்க நேரம் ஒதுக்கக் கேட்பது பயனுள்ளதாக இருக்குமா என்று யோசிக்கின்றேன்.

அடுத்த ஆண்டு மே மாதம் அவர்களின் தேர்தல். அவர் எங்களைச் சந்திக்க சம்மதிப்பார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். நாம் டில்லி செல்ல வேண்டிய அவசியமில்லை. அவர் தென்மாநிலங்களுக்குச் செல்லும்போது அவரைச் சந்திக்கலாம்.

கஜேந்திரகுமார் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரானவர் என்ற போதிலும், அரசமைப்பில் உள்ள விதிகளை அமுல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அவர் இந்த நேரத்தில் உணர்ந்து கொள்வார் என்று நான் நம்புகின்றேன்.

13ஆவது திருத்தம் தொடர்பாக இலங்கை அரசுக்கு இந்தியாவால் மட்டுமே அழுத்தம் கொடுக்க முடியும். தற்சமயம் மக்களால் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் எமக்கு இல்லாவிட்டால் அரச திணைக்களங்களை எதிர்க்க முடியாது. படைகளும் பௌத்த பிக்குகளும் தமிழர் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

உங்கள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டால், அனைவரும் கையொப்பமிட்டு அனுப்பக்கூடிய ஒரு கடித நகலை நான் தயாரிக்கலாமா என்பதைத் தெரிவிக்கவும். கஜேந்திரகுமார் 13ஆவது திருத்தத்தின் பலனை அவர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், எங்களது கூட்டு நடவடிக்கைக்குத் தனது ஒப்புதலைக் காட்டுவதற்காகவே எங்களுடன் வர முடியும்.

நாம் யாரும் மோடியைத் தனித்தனியாகச் சந்திப்பதில் பயனில்லை. நீங்கள் ஒப்புதல் அளித்தால் சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரையும் இந்த முயற்சியில் ஈடுபடுத்தலாம்.

மூன்று நாட்களுக்குள் பதிலளிக்கவும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## 12 வயது...

தில் சிறுமியின் அம்மம்மா கொலைக் குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமி தனது அம்மம்மாவினால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டது உறுதியானதையடுத்து. 53 வயதான ஓய்வுபெற்ற மருத்துவமாதுவை நேற்று மாலை கோப்பாய் பொலிஸார் கைது செய்தனர்.

அவர் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தியிலுள்ள விடுதியொன்றில் நேற்று முன்தினம் 12 வயதுச் சிறுமியின் சடலம் மீட்கப்பட்டது. அருகில்பாதிக்கப்பட்ட நிலையில் 53 வயதான அம்மம்மா காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


மெகா பவர்
திகதி 13/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1584
O 26 12 17 24 62
32811

தன நிதானய
திகதி - 2023.09.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1266
I 16 35 56 67 I
40357

Lucky 7
திகதி 13.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0062
L7 இலக்கம் 3 7
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 8 3 8 1 5 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3478
சீட்டிழுப்பு திகதி 13.09.2023
Q 17 37 51 70
Q 61176

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.09.13
சீட்டிழுப்பு இலக்கம் 545
தனுசு 12 15 24 38 தனுசு

மஹஜன சம்பத
திகதி 2023/09/13
சீட்டிழுப்பு இலக்கம் 5236
A 0 1 7 9 5 4

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2210 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.09.13 தினம் புதன்கிழமை
12 45 46 53 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,493,252.40
24463 699

சனிதா
திகதி 2023.09.13 வெற்றி வாரம் 4371 வர்ணம் ஊதா
06 15 27 35 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,316,244.00
33266 393

சீட்டிழுப்பு வாரம் 3922 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.09.13 தினம் புதன்கிழமை
09 15 17 28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,401,920/-
95880 685

கப்றுக
திகதி 13.09.2023 வெற்றி வாரம் 1386
A 21 27 40 61 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 439,414,994.20
38047 183

ஜயோதா
திகதி 2023.09.13 வெற்றி வாரம் 1956 வர்ணம் மஞ்சள்
21 44 62 65 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,975,199.20
79174 130

அட கோடிபதி
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2036
வர்ணம் : ரோஸ்
சீட்டிழுப்பு திகதி : 2023.09.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,146,328/-
13 43 58 71 G
96979 390


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியியல் கற்கை நெறிகள்**
Banking Courses
DBF & HDBF (16/09/2023)
(IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)

**கணக்காளர் கற்கை நெறிகள்**
Chartered Accounting Courses
Business Level I,II (16/09/2023)

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
aat (Sri Lanka)
(AA1 - 16.09.2023) G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
(AA2, AA3 -16/09/2023)

(C-7230)

**Certificate Course in English**

Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/021 222 9149
077 440 5917


# 19 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது

நெடுந்தீவு கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 19 பேர் நேற்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது இலங்கை கடற்படையால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று படகுகளுடன் இவ்வாறு கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்து வருகின்ற நடவடிக்கையினை கடற்படையினர் முன்னெடுத்துள்ளனர். (ம-7)


## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7229)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

## விசா விண்ணப்பம்

கனடா பிரான்ஸ் லண்டன்

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா,பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும்.ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

**ருமேனியா,கனடா வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுத் தரப்படும்**
விசா சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று (16 / 09/ 2023)
சனிக்கிழமை 10.30 – 4.30 மணிவரை நடைபெறும்

**நடைபெறும் இடம் : Loyalas Wedding hall**
**No.10, ST.Patrick Road** (சென்.பற்றிக்ஸ் கல்லூரி முன்பாக)

குறிப்பிட்ட விசா மாத்திரம் கையிருப்பில் உள்ளது.
முற்பதிவுகள் அவசியம்.முற்பதிவுகள் இல்லாதவர்கள் அனுமதிக்கப்படமாட்டாது.
தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.

முற்பதிவுகளுக்கு
**NSA Group of Company (Pvt) Ltd.**
197,Main Street,Jaffna
(நிபந்தனைக்குட்பட்டது) (17061)
077 266 6429, 021 221 0599
077 877 4838

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS
பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=
(17019)
T.P:077 544 8503

## வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (17075)

## உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு (C-7257)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## CANADA VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7257)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS


## மரண அறிவித்தல்



தோற்றம் 11 – 10 – 1931

மறைவு 12 – 09 – 2023

### செல்வி இராசையா அன்னம்மா (அன்னமன்ரி)

ஒட்டுவெளி மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராசையா அன்னம்மா அவர்கள் 12.09.2023 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய இராசையா - றோசம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களாகிய தம்பிராசா (அளவெட்டி தெற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை), முத்துப்பிள்ளையின் மருமகளும்(வளர்ப்பு மகள்), காலஞ்சென்றவர்களாகிய அருளையா(காணி அபிவிருத்தி திணைக்களம்) அருளம்மா ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களாகிய பொன்மலர்(நகரசபை, திருகோணமலை), வல்லிபுரம்(எழுதுமட்டுவாழ் C.C.T.M.S) ஆகியோரின் மைத்துனியும் தேவநேசம், தெய்வசோதி, டேவிட் ஆதர்(பெங்களூர்), விசுவாசம் கொர்நேலியுஸ்(கலிபோர்னியா), காலஞ்சென்ற சற்குணதேவி ஆகியோரின் சிறியதாயாரும் காலஞ்சென்ற பரமலிங்கம் (வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை), தில்லையம்பலம்(விஸ்வாமில்), கோமதி(பெங்களூர்), கோசலா(கலிபோர்னியா) ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயமோகன், சாந்தி, ஜெயவதனி, சிறீஸ்கந்தராஜா, குணவதனி(நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), பரிமளச்செல்வன்(சென் ஜேம்ஸ் தேவாலயம், நல்லூர்), ஜெயரூபன், கலா, ஜெயமாலினி விஜயசுந்தரம், ஜெயறோகினி, சசிதரன்(ரோக்கியோ சுப்பர் மிக்ஸ், மிருசுவில்), விஸ்வேதிதன் (யாழ். போதனா வைத்தியசாலை), வினோஜா(உடுவில் பிரதேச செயலகம்), கல்யாணி(மக்கள் வங்கி, புல்மோட்டை), புலேந்திரன் (கணக்காய்வு திணைக்களம், வவுனியா), காயத்ரி(அவுஸ்திரேலியா), விதூசன்(Hallo Turst, கிளிநொச்சி), காலஞ்சென்ற அருள்குமரன்(C.T.B வவுனியா) மற்றும் மதி, டேவிஸ், எரிக்கா, ஜெசிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 14.09.2023 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று அளவெட்டி கொட்டுப்பனை அமெரிக்கன் சிலோன் மிஷன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(17070) தகவல் : குடும்பத்தினர்


## TECHNO WORLD
TECHNO WORLD INNOVATIVE IDEAS OPEN NEW WORLD
**தொழில்நுட்ப கல்லூரி**

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை

இம்முறை தேசிய, மாவட்ட ரீதியில் முதல்நிலை பெற்ற மாணவர்கள் தொடர்ந்து ஆறாவது முறையாகவும் முன்னிலையில்

உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு
**BIO SYSTEMS TECHNOLOGY**

| NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிலக்ஸ்சன் | 2AB | 1 | சஜீனா | C2S | 6 | சனுக்ஸ்சி | 2BC | 18 |
| அஸ்வினி | A2B | 1 | ஜீரோசி | 2CS | 7 | சங்கீதா | 2CS | 18 |
| நிரோமி | B2C | 2 | சயந்தினி | A2B | 7 | குகப்பிரியா | B2C | 20 |
| அபிவர்சனா | B2C | 2 | தனுசா | C2S | 7 | தவருக்சன் | 3C | 22 |
| கனிஸ்கா | 3B | 2 | அர்ச்சனா | B2C | 7 | தர்சிகா | 3C | 22 |
| அன்ரனிஸ் | 3B | 2 | டிலுக்சினி | C2S | 9 | பிரவினா | 2CS | 22 |
| நந்தவி | 3C | 3 | ஜெயதர்சினி | 2CS | 11 | திலக்கிகா | 3C | 24 |
| அகஸ்ரா | 2BC | 3 | சபிர்னா | A2B | 12 | மிருதார்தன் | 3C | 24 |
| டென்சியா | 2BS | 4 | ரிகானி | C2S | 12 | தர்சிகா | C2S | 24 |
| ரேமியன் | 3C | 5 | சதுர்சிகா | B2C | 13 | திலக்சிகா | 3C | 24 |
| காவியா | A2B | 5 | யதுர்சினி | 2CS | 13 | தர்சிகா | 3C | 25 |
| செறின் | 3A | 6 | பவித்திரா | 2BC | 14 | சாமந்தி | 3C | 26 |
| தேனுஜா | B2C | 6 | சிவஸ்துதி | B2C | 16 | சுபகரினி | 2BC | 31 |
| அனுசிகா | ABC | 6 | ரகசா | 2CS | 17 | குகப்பிரியா | 2CS | 35 |

பொறியியல் தொழில்நுட்ப பிரிவு
**ENGINEERING TECHNOLOGY**

| NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK | NAME | RESULTS | RANK |
|---|---|---|---|---|---|---|---|---|
| திபன்பரபாகர் | 2AB | 1 | றேங்கில் | B2S | 8 | தனுசாந் | B2C | 40 |
| கிருபாகரன் | 2AB | 3 | கஜானன் | 2CS | 8 | சப்நொன் | A2B | 42 |
| நிலோஜன் | 3B | 3 | சிந்துஜன் | 2CS | 9 | பிரதீபா | B2C | 43 |
| கனிஸ்ரன் | 2AB | 4 | லக்சன் | C2S | 9 | புஸ்பகுமார் | 3C | 47 |
| பதுசன் | 2BC | 4 | மார்க் டெக்சன் | C2S | 10 | விதுசன் | 2CS | 48 |
| லக்சனா | 2AB | 5 | ஜதுசன் | A2B | 10 | அசிவ் | 2CS | 49 |
| மரின்டா | 3C | 6 | தமிழ்முலகன் | B2C | 24 | பசித் | B2C | 58 |
| சாம்சன் | BCS | 6 | பகீரதன் | B2C | 27 | மனுஜன் | 2CS | 59 |
| மேரி ஜெர்மிலா | A2B | 7 | இனியவன் | 3C | 31 | சகீப் | B2C | 59 |
| ஜானுசன் | 3C | 7 | ராகுலன் | 3C | 39 | | | |

(C-7236)

**புதிய பிரிவுகள் - A/L 2023 DAY CLASS, A/L 2025**
ஆரம்பம் - 16.09.2023 நேரம் - காலை 8.30
P.N - 077 017 5346


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org